உ



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்,
மாத்தளையை வசிப்பிடமாகவும் கொண்டவரும்,
மாத்தளை, ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய
பிரதமகுரு
அமரர்.பிரம்மஸ்ரீ.க.பாலசுப்ரமண்யசர்மா
அவர்களின் அன்பு மனைவியுமான,

## அமரர்.பா.சௌந்தரவல்லி

அவர்களின்,

வருஷாப்தியமன்று வெளியிடப்படும்

# நினைவஞ்சலி மலர்

**25.12.2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



2006-01-06

அன்று இறைபதமெய்திய

எம்

குடும்ப விளக்கு

# திருமதி.சௌந்தரவல்லி பாலசுப்ரமணியசர்மா

அவர்களின்

ஞாபகார்த்தமாக

2006.12.25 வருஷாப்தியம் அன்று

வெளியிடப்படும்

# நினைவஞ்சலி மலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எம்மை
உயிராக்கி
உடலுக்கு உணர்வு ஊட்டி
உயிருக்கு வலு ஊட்டி
உண்டிக்கு உணவு ஊட்டி
உயர்வுக்கு வழிகாட்டி
திறனுக்கு மெருகூட்டி
வாழ்வுக்கு ஒளியூட்டிய
எம்
இல்லத்து குலவிளக்காம்
எமையீன்ற அன்னையின்
நினைவுகளுக்கு
இம்மலர்
சமர்ப்பணம்!

--மக்கள்--





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மண்மகிழ 20 . 05 . 1926

கண்நெகிழ 06 . 01 . 2006



# திருமதி.சௌந்தரவல்லி பாலசுப்ரமண்யசர்மா

## திதி வெண்பா

பார்த்திப நல்லாண்டில் பார் போற்று மார்கழியை
சாரும் பூர்வ பட்ச சப்தமியில் - பார் நீக்கி
பேர் கொண்ட சௌந்தரவல்லி பிரிந்திடவே
கார் சூழ்ந்ததுவே இந்த இகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வாழ்க்கை வரலாறு...

ஈழமண்ணில் யாழ்ப்பாணம் கொக்குவில் எனும் பதியில் காசிபகோத்திர வழிவந்த மார்க்கண்டேய ஐயர் லட்சுமிஅம்மா தம்பதிகளின் ஏக புத்திரியாக அட்சய வருடம் வைகாசித் திங்கள் ஏழாம் திகதி வியாழக்கிழமை பூர நட்சத்திரத்தில் (20-05-1926) சௌந்தரவல்லி பிறந்தார். தனது கல்வியை கொக்குவில் இந்து கல்லூரியில் மேற்கொண்டார் சிறு பிராயத்திலிருந்தே தையல் பின்னல் போன்ற கலைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டார். விதவிதமான தையல் அலங்காரங்களையும், பின்னல் வேலைகளையும் கண் பார்க்க கை செய்கின்ற திறன்மிக்கவர். தான் செய்த அலங்காரங்களை சட்டமிட்டு சுவரில் மாட்டுவதிலும், தனக்கு பிடித்தமானவர்களுக்கு அவற்றை பரிசளிப்பதிலும் இறுதி மூச்சு வரை ஈடுபட்டார். சுய நினைவை இழப்பதற்கு முன் கூட அவர் தையல் அலங்காரம் (Cross Stich) ஒன்றை செய்து கொண்டிருந்தார். தையல் ஊசியில் நூல் கோர்த்து தையலிடையே செருகிவிட்டு சென்று விட்டார். முடிவுறாத அந்த அலங்காரமும் அவரது குடும்பத்தாரை போலவே அல்லலுறுகிறதே.....! யார் தேற்றுவார்?

தாய்மாமன் மகனான பாரத்வாஜ கோத்திரத்தின் வழிவந்த கனகசபாபதி குருக்களின் மகன் பாலசுப்ரமண்யசர்மாவை தாரண வருடம் ஆவணி பதினாறில் (1944-09-01) கணவனாக வரித்து கொண்டார். தன் இல்லற வாழ்வை புகுந்த வீடான மாத்தளையில் தொடங்கினார். புகுந்த வீட்டில் மாமா, மாமி, மச்சாள்மார், மச்சான் ஆகியோருடன் ஒற்றுமையாக வாழ்ந்தார். தான் ஒருவளாக சகோதர உறவுகளின்றி வாழ்ந்த சோகத்தை தன் குழந்தைகள் மூலம் தீர்த்துக் கொண்டார்.

சொர்ணவல்லி, ஜெகநாதன், ஜெயலட்சுமி, ஜெயானந்தன், யோகானந்தன், யோகராணி, ஜெகதாம்பிகை, வாசுதேவன், பாலரஞ்சனி, கலாரஞ்சனி என தம் மக்களுக்கு பெயரிட்டு, சிறப்போடு வளர்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வயதில் குழந்தை வாசுதேவனை காலனுக்கு பறிகொடுத்த சம்பவம், அதன் சோகம் இறுதிவரை அவரை வாட்டியது.

ஆரம்பத்தில் மகப்பேற்றுக்காக தாய்வீடு சென்று குழந்தைகளைப் பெற்றெடுத்த அமரர்.திருமதி.சௌந்தரவல்லி அவர்கள் பின்னர். மாத்தளையில் வீட்டிலேயே தமது குழந்தைகளை பெற்றார். சிங்களமொழி தெரியாத காரணத்தால் ஆஸ்பத்திரிக்கு செல்ல விரும்பாத இவர் தன் திடமான மனவுறுதியையும், தன்னம்பிக்கையையும் துணைக்கொண்டு, குழந்தைகளை ஈன்றெடுத்தது மட்டுமல்ல தன் இறுதிமூச்சையும் கூட தன் இல்லத்திலேயே நீத்தமை அவரது தன்னம்பிக்கைக்கு சான்று பகர்கிறது.

தாம் பெற்ற மக்களை தன் கணவரின் வழிநடத்தலுடன் இணைந்து ஒத்துழைத்து கல்வியில் சிறப்பெய்த உதவினார். இனக்கலவரத்தில் அனைத்தையும் இழந்த நிலையில் யாழ் சென்று தமது கொக்குவில் இல்லத்தில் வசித்தபோது, சுற்றம் சூழ வாழ்ந்த சந்தோஷம் அவரை ஆட்கொண்டது. தன் இளம் பிராயத்து நினைவுகளை தன் மக்களுக்கு சொல்லி சொல்லி மகிழ்வார்.

மீண்டும் தம் மக்களின் தொழில் நிமித்தம் மாத்தளைக்கு குடிபெயர்ந்து குடும்பத்தோடு வாழ்ந்தார். யாழ்ப்பாணத்தில் முதுமாணி பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த வேளை இவரது சிரேஷ்ட புத்திரி திருமதி.சொர்ணவல்லி பத்மநாப ஐயர் 1987ல் தன் குழந்தைகளையும், கணவரையும் பரிதவிக்க விட்டுவிட்டு இறைபதம் எய்தியமை அமரர்.சௌந்தரவல்லி அவர்களை பெரிதும் பாதித்தது.

மாத்தளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய பிரதம குருவாக இருந்த இவரது கணவர் பிரம்மஸ்ரீ.க.பாலசுப்ரமண்யசர்மா அவர்களின் ஆலய பணிக்கு முழு ஒத்துழைப்பையும் நல்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தின் ஆணிவேராய் திகழ்ந்த இவரது கணவரின் இறப்பு இவரை பெரிதும் வாட்டியது. கணவர் ஏற்றிருந்த குடும்பபொறுப்பை மக்களின் கையில் வழங்கிவிட்டு, தன்னை சற்றே ஆசுவாசப்படுத்திக் கொண்டாலும் தம் மக்களின் எதிர்காலம் பற்றிய கவலை அவரை இறுதிவரை வாட்டிக் கொண்டே இருந்தது.

பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என அனைவருடனும் அன்பாக அரவணைத்து மகிழும் இவர், அவர்களின் பிறந்த தினம், மற்றும் விஷேச நாட்களின் பரிசுப்பொருட்களை வழங்கி மகிழ்வார்.

சிறுகுழந்தைபோல், இனிப்பு வகைகளை உண்பதில் மிகுந்த ஆர்வம் உடையவர். வெளிநாட்டிலிருந்து மகள், பேரப்பிள்ளைகள் என்ன வேண்டும்? என கேட்டால் 'சொக்லேட்' என்பதுதான் அவரது பதிலாக இருக்கும்.

தன் உறவுகளை உபசரிப்பதிலும் கவனிப்பதிலும் இவருக்கு நிகர் இவரே. ஒவ்வொருவருக்கும் விருப்பமான உணவு வகைகளை தயாரிப்பதிலும், அதனை அவர்களுக்கு கொடுத்து அவர்கள் சுவைத்து உண்பதை ரசிப்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தன் கையால் ஏதாவது ஒரு கறியாவது சமைக்காவிட்டால் அன்றைய உணவு அவருக்கு ருசிக்காது.

தமது மக்களின் தொழில்சார்ந்த உத்தியோகத்தார்கள் வந்தால், அவர்களோடு அளவளாவி, குடும்பநலம் விசாரித்து உபசரிப்பது இவருக்கு மிகவும் பிடித்தமானது. சிலவேளைகளில் தன் இயலாமை காரணமாக, சமையல் வேலைகளில் ஈடுபடமுடியாவிட்டாலும் கூட எந்நாளும் காய்கறிகளை நறுக்கிக் கொடுக்கும் பொறுப்பை இறுதிவரை அவர் கைவிடவே இல்லை.

எனது கணவரின் உயிர்பிரிந்த வீட்டிலேயே நானும் உயிர் நீக்கவேண்டும் என்பது இவரது அவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று தன் கணவரின் உயிர் பிரிந்த அதே அறையில் அதே நேரத்தில் இறைவனடி சேர்ந்த,

## அமரர்.திருமதி.சௌந்தரவல்லி
### அவர்கள்

தம் குல தெய்வத்தின் பாதாரவிந்தங்களை அடைந்து பேரானந்த பெருவாழ்வை அனுபவிக்க இறைவனைப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'

-திருக்குறள்-







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வில் விளக்கு

'விளக்கு' என்பது நம் வாழ்வை விளங்க வைப்பது. அதாவது நம் வாழ்வில் இருளை அகற்றி ஒளியை ஏற்றி நன்மை பயக்க செய்வதே விளக்காகும்.

திருவிளக்கில் எழுந்தருளும் தெய்வங்கள்,

திருவிளக்கின் நுனியில்: ஓங்கார ரூபமாக கணபதி
" தண்டுப்பகுதியில்: மகாவிஷ்ணு
" நெய்விடும் அகலில்: சிவன்
" அடிப்பாகத்தில்: பிரம்மா

ஐந்து முகங்களில் திரி வைக்கும் இடத்தில்:
தற்புருஷம், அகோரம், ஈசானம், சத்தியோசாதம், வாமதேவம் ஆகிய சிவனின் ஐந்து முகங்கள்

ஒளிச்சுடரின் மஞ்சள் நிறம்: சௌபாக்யலட்சுமி
வெண்மை: சரஸ்வதி
சிவப்பு: காளி, துர்க்கா

திருவிளக்கின் அகல், நெய், சூர், திரி, என்பன,
அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகை குணங்களையும், புருடார்த்தங்களையும் தரவல்லது.

விளக்கின் வகைகள்:
மண்ணால் செய்த அகல்விளக்கு அல்லது வெள்ளி. பஞ்சலோகத்தால் செய்யப்பட்ட விளக்கு பூஜைக்கு மிகவும் உகந்தவையாகும் அதிலும் ஐந்து முகங்கள் அமைதுவது சாலவும் சிறந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனுக்கு உகந்த எண்ணெய்:

| | |
|---|---|
| மகாலட்சுமி: | நெய் |
| நாராயணன்: | நல்லெண்ணெய் |
| கணபதி: | தேங்காயெண்ணெய் |
| தேவி: | ஐந்துவகை எண்ணெய் |
| சர்வ தேவதை: | நல்லெண்ணெய் |

## எண்ணெய் வகைகளும், பலன்களும்:

1. நெய்: சகல சுகங்கள், வீட்டு நலன்
2. நல்லெண்ணெய்: சகல பீடைகளும் விலகும்.
3. விளக்கெண்ணெய்: புகழ், ஜீவசுகம், தாம்பத்திய நலம்
4. கடலைஎண்ணெய்: தீபமேற்ற கூடாது. இதனால், நித்திய பீளடை, கடன்தொல்லை, பயம் ஆகியவை வந்து சேரும்.

## விளக்கேற்ற உகந்த திரிகள்

1. பஞ்சு:

   இதனால் திரி இடுதல் சாலவும் சிறந்தது

2. தாமரைத்தண்டு:

   இதனை திரித்து விளக்கோற்றினால் முன்வினை நீங்கும், செல்வம் நிறைந்து நிற்கும்.

3. வாழைத்தண்டு:

   இதனை திரித்து விளக்கேற்ற குழந்தைச் செல்வம் கிடைக்கும்.

4. வெள்ளெருக்கு:

   இதன் பட்டையை திரியாக செய்து ஏற்றும் போதும் பெருஞ்செல்வம் கிட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. புது மஞ்சள் துணி:

இதனால் திரி செய்து விளக்கேற்ற அம்மன் அருள் கிட்டும், வியாதிகள் நீங்கும்.

6. சிவப்பு நிற துணி

இதனை திரி செய்து விளக்கேற்ற திருமணத்தடை, கல்வித்தடை, மலட்டுத்தன்மை என்பன நீங்கும்.

வெள்ளைத் துணியை பன்னீரில் நனைத்து காய வைத்து திரியாக்கி பயன்படுத்தினால் உத்தம பலன் கிட்டும்.

### தீபம் ஏற்றும் திசைகளின் பலன்கள்:

கிழக்கு: துன்பம் ஒழியும், கிரகப் பீடை அகலும்

மேற்கு: கடன்தொல்லை, சனிப்பீடை, பங்காளி பகை நீங்கும்

வடக்கு: திரண்ட செல்வமும், மங்களமும் உண்டாவ -தோடு, திருமணத் தடை, கல்வித் தடை அனைத்தும் நீங்கும்.

தெற்கு: இத்திசைகளில் தீபம் ஏற்றல் ஆகாது. பெரும் பாவம், அபசகுணம்

### தீபம் ஏற்றும் நேரம்:

காலை 3.00 மணிமுதல் 5.00 மணிக்குள் ஏற்றினால் சர்வ மங்களமும் கிட்டும்.

சாயங்காலம் தீபம் ஏற்றினால் நல்லவைகள் குடும்பசுகம், புத்திர சுகம் கிட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரி ஏற்றும் முகங்களின் பலன்கள்:

| | |
|---|---|
| ஒருமுகம்: | மத்திமம் |
| இரண்டு முகம்: | குடும்ப ஒற்றுமையை பெருக்கும் |
| மூன்று முகம்: | புத்திர சுகம் |
| நான்கு முகம்: | பசு, பரி இனத்தை தரும் |
| ஐந்து முகம்: | செல்வத்தைப் பெருக்கும். |

வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், நெய் இவை மூன்றும் கலந்து தீபம் ஏற்றினால் செல்வம் பெருகும்.

வேப்பெண்ணெய், நெய், இலுப்பெண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காயெண்ணெய் இவை ஐந்தும் கலந்து தீபம் ஏற்றினால் அன்னை பராசக்தியின் அருள், மந்திரசக்தி கிட்டும்.

## திருவிளக்கு பூசையின் போது அமரும் முறை

மேஷம், சிம்மம், தனுசு ராசிக்காரர்கள்: கிழக்கு நோக்கி

ரிஷபம், கன்னி, மகரம் ராசிக்காரர்கள்: வடகிழக்கு நோக்கி

மிதுனம், துலாம், கும்பம் ராசிக்காரர்கள்: வடக்கு நோக்கி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானபலன்

01. அன்னதானம்:-

தரித்திரமும், கடனும் நீங்கும்.

02. வஸ்திரதானம்:-

ஆயுளை விருத்தி செய்யும்.

03. பூமிதானம்:-

பிரம்மலோகத்தையும், ஈஸ்வரதரிசனத்தையும் நல்கும்.

04. தேன்தானம்:-

புத்திரபாக்கியம் உண்டாகும்.

05. கோதானம்:-

ரிஷிக்கடன், தேவகடன், பிதுர்கடன் அகலும்.

06. நெல்லிக்கனிதானம்:-

ஞானம் உண்டாகும்.

07. தீபதானம்:-

கண்பார்வை தீர்க்கமாகும்

08. அரிசிதானம்:-

பாபங்கள் நீங்கும்.

09. நெய்தானம்:-

நோய் தீர்க்கும்.

10. பால்தானம்:-

துக்கம் நீங்கும்.

11. தயிர்தானம்:-

இந்திரிய விருத்தி.

12. தங்கதானம்:-

குடும்ப தோஷம் நீங்கும்.

13. தேங்காய்தானம்:-

நினைத்த காரியம் முடியும்.

14. பழங்கள்தானம்:-

புத்தியும், சித்தியும் கிட்டும்.

15. வெள்ளிதானம்:

மனக்கவலை நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்ய வேண்டியவை

- ❒ இறைவனை வணங்குக!
- ❒ இனிமையாக பேசுக!
- ❒ உண்மையே பேசுக!
- ❒ அன்பாகப் பேசுக!
- ❒ நன்மையே பேசுக!
- ❒ மெதுவாக பேசுக!
- ❒ சிந்தித்து பேசுக!
- ❒ சபையறிந்து பேசுக!
- ❒ சமயமறிந்து பேசுக!
- ❒ பேசாதிருந்து பழகுக!
- ❒ சொல்வதையே செய்க!
- ❒ சோம்பல் அகற்றுக!
- ❒ கோபத்தை நீக்குக!
- ❒ யோசித்து செய்க!
- ❒ செருக்கை அடக்குக!
- ❒ உயர்வையே எண்ணுக!

## கொள்ள வேண்டியவை

- ✓ ஏழ்மையில் நேர்மை
- ✓ தோல்வியில் விடாமுயற்சி
- ✓ துன்பத்தில் துணிவு
- ✓ செல்வத்தில் தியாகம்
- ✓ பதவியில் பணிவு
- ✓ கோபத்தில் பொறுமை
- ✓ அன்பில் தூய்மை
- ✓ அடக்கத்தில் எளிமை
- ✓ உழைப்பில் விருப்பம்
- ✓ பேச்சில் சிக்கனம்
- ✓ கல்வியில் ஆர்வம்
- ✓ கடமையில் பற்று







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வணக்கம்

## சூரியன்

மித்திரா ரவியே மிடியினைத் தீர்ப்பாய்
வித்தகா பாஸ்கரா விரிசுடர் விண்ணவா
சித்தமே நினைத்திடச் செயம் தரு ஸ்ரீதரா
இத்திரை வலம் வரு இந்திரா போற்றியே!

## சந்திரன்

சோமனே சுத்தனே சோர்விலா சோதியே
காமனை கரித்தவன் கலைமுடி தாங்கியே
நாமனே நகை முக நங்கையின் நாயகா
நேமனே நிறைநல நேசனே போற்றியே!

## செவ்வாய்

மங்களக் குமரனே மணந்தரு சக்தியே
அங்காரக னென்னும் அழகு செவ்வண்ணனே
பொங்கிட நலத்துடன் பொருள் நிலம் அளித்திடும்
எங்களின் இதயனே இன்பனே போற்றியே!

## புதன்

புண்ணியப் புதனே புகலெனப் பணந்தேன்
கண்முன்னே கனிந்து நீ கருணையாய் ஒளிவிடு
பண்ணிடும் செயல்களின் பலனெனப் பல் நலம்
மண்ணினில் அருள்வாய் மலரடி போற்றியே!

## குரு

குருவெனும் பிரகஸ்பதி குறைகளைத் தீர்ப்பாய்
திருவொடு நலம்பலத் தினந்தினம் சேர்ப்பாய்
பெருமன வியாழனே பெருந்தவ அந்தணா
நறுமலர்ப் பாதனே நம்பினேன் போற்றியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுக்கிரன்

கலைகளின் தந்தை நீ கண்ணில் ஒளியும் நீ
நிலைதரு வெற்றியின் நித்தியத் தலைவன் நீ
மலைமகள் அடியவா மலர் தவழ் மார்பனே
தமத் தொளிச் சுக்கிரக சந்ததம் போற்றியே!

## சனீஸ்வரன்

காகத்தின் மீதினில் கருணையாய் வருபவர்
சோகமே தீர்த்துச் சுகமது தருபவர்
மோகமும் மூடமும் மோசமும் தீர்ப்பவர்
வேதனே மந்தனே வேண்டினேன் போற்றியே!

## இராகு

சிம்ஹிகை மைந்தனே சிம்மத்தாள் அடியவா
தம்பதம் பணிபவர் தனித்துணையானவா
வம்புகள் தீர்த்து வளந்தரு சர்ப்பனே
நம்பினேன் நலந்தரு ராகுவே போற்றியே!

## கேது

செய்தவம் பனித்திடச் செயம்தரு தேவன் நீ
மெய்யினில் மெய்யுநீ மென்மையின் மென்னை நீ
பெய்மழையென வருள் பெருகவே பொழிந்திடும்
அய்யனே கேதுவே அரவனே போற்றியே!

## பலன்மொழி

நவநிதி நல்கிடும் நவக்கிரக மாலையைத்
தவத்தோடு நேமமாய் தனித்திருந்துரைத்திடின்
அவத்தோடு வறுமைகள் அழி பசி பிணிகளும்
சிவ சிவ மறைந்திடும் செல்வமே நிறைந்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைத் தொகுப்பு

*பயன்:*

**திருமணம் கைகூடும், பதினாறு பேறுகளும் நிறையும்**

தோடுடையசெவி யன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடி
காடுடையசுட லைப்பொடி பூசியென்
உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மல ரான்முனை நாள்பணிந்
தேத்த அருள்செய்த
பீடுடைய பிர மாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே!

---

நீர்பரந்த நிமிர் புன்சடை மேலோர்
நிலாவெண் மதிசூடி
எர்பரந்தஇன வெள்வளை சோரஎன்
உள்ளம் கவர்கள்வன்
ஊர்பரந்த உல கின் முதலாகிய
ஓரூர் இது என்னப்
பேர்பரந்தபிர மாபுரம் மேவிய
பெம்மான் இவன் அன்றே!

---

வண்டார்குழல் அரிவையொடும்
பிரியாவகை பாகம்
பெண்டான்மிக ஆனான்பிறைச்
சென்னிபெருமானூர்
தண்டாமரை மலரான் உறை
தவளம்நெடு மாடம்
விண்தாங்குவ போலும்மிகு
வேணுபுரம் அதுவே!

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வினைக் கிவ்வினை யாமென்று
சொல்லு மஃதறிவீர்
உயவினை நாடா திருப்பது
முத்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல்
போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ
றாதிரு நீலகண்டம்!

---

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே!

---

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவளே சறவே!

---

*பயன்:*

**மனநிம்மதியும் மகிழ்ச்சியும் உண்டாகும்**

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும்
வழிபடும் அதனாலே!

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பயன்:*

**வெப்புநோய் அகலும், எல்லாத் துன்பங்களும் நீங்கும்**

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவா யான் திருநீறே!

---

*பயன்:*

**நவகோள்களும் நன்மையே செய்யும்**

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்லடி அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே!

---

*பயன்:*

**வயிற்றுநோய் நீங்கும், பிணிகள் எவையும் நெருங்கா**

கூற்றாயினவாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
எற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவேன் எப்பொழுதும்
தோற்றா தென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே!

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலம்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையில் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலைந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டா னத்துறை அம்மானே!

---

*பயன்:*

**பேரின்பப் பெருவாழ்வு கிட்டும்**

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்!

---

*பயன்:*

**பதவி உயர்வும் மிகுந்த ஊதியமும் கிட்டும்**

தழைத்தோர் ஆத்தி யின் கீழ்
தாபரம் மணலால் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக்
கறந்து கொண்டாட்டக் கண்டு
பிழைத்ததன் தாதை தாளைப்
பெருங்கோடு மழுவால் வீசக்
குழைத்ததோர் அமுதம் ஈந்தார்
குறுக்கை வீரட்டனாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்:

**கல்வியும் கலைகளும் செல்வமும் வளரும்**

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி!

---

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச் சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய் செல்வம் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதி!

---

பயன்:

**உயர்ந்த வேலைவாய்ப்பு, மிகுந்த ஊதியம் கிடைக்கும்**

ஊனாய் உயிரானாய் உடலானாய்
உலகானாய்
வானாய் நிலனானாய்
கடலானாய் மலையானாய்
தேனார் பெண்ணைத் தென்பால்
வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
ஆனாய் உனக்காளாய் இனி
அல்லேன் எனலாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலை விதியே வினையின் பயனே
விரவார் புரமூன் றெரிசெய்தாய்
காலை எழுந்து தொழுவார் தங்கள்
கவலை களைவாய் கறைக்கண்டா
மாலை மதியே மலையேல் மருந்தே
மறவேன் அடியேன் வயல்சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கக்சூர்
ஆலக் கோயில் அம்மானே!

---

*பயன்:*

**இம்மையில் இனிய வாழ்வும்,**
**மறுமையில் முத்தியும் கிட்டும்**

குலம்தரும் செல்வம் தந்திடம் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரும் செய்யும் நீள்விகம் மருளும்
அருளோடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான் கண்டு
கொண்டேன் நாராயணா என்னும் நாமம்!

---

*பயன்:*

**நல்லன எல்லாம் கிடைக்கும்**

தனம் தரும் கல்வி தரும் ஒரு
நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும்
தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்கணளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நன்றி நவில்கின்றோம்!

எமது குடும்பத் தலைவி,

**திருமதி.பா.செளந்தரவல்லி** அவர்கள்

இறைபதம் எய்திய செய்தியறிந்து, பல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தும், ஆறுதல்படுத்தியும் உதவிய அனைவருக்கும் மற்றும் தகனக்கிரியைகளின் போது சகல விதத்திலும் உறுதுணையாய் நின்று உதவிய அனைவருக்கும் மேலும் அவரது வருஷாப்தியத்தினத்தன்று இந்நினைவு மலரை வெளியிட உதவிய


**ரகுராம்ஸ் பதிப்பகத்தாருக்கும்**

மற்றும் சகல வழிகளிலும் உதவிய, ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர் நண்பர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இல: 87/2, இராஜ வீதி,
மாத்தளை.
தொ.பே: 066-2230767.

இங்ஙனம்,
மக்கள், மருமக்கள்

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொண்ட மகற்கு' (குறள்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

பாரத்வாஜக் கோத்திரத்தின்
வழிவந்த
**கனகசபாபதிக் குருக்கள்**
\+
**ஞானகியம்மாள்**

- **மனோன்மணி** + **மோகனராஜ ஐயர்**
- **பத்பநாப குருக்கள்** + **ருக்மணி அம்மா**
  - **(அமரர்) சொர்ணவல்லி** (M.A) ஆசிரியை + **கி.பத்மநாப ஐயர்** (B.Sc)
    - **வித்யா** + **கேசவன்**
      - **செளம்யன்**
      - **ஹரிணி**
    - **பூரணி** + **சாந்தகுமார்**
      - **கீர்த்தனா**
    - **ஜனனி** + **கிருபாகரன்**
      - **பிரதோஷ்**
      - **சாஹித்யா**
  - **ஜெகநாத சர்மா** (நாகொல்ல பிள்ளையார் ஆலய பிரதமகுரு) + **தனலட்சுமி**
    - **கெளரி** + **கணேஷரஞ்சன்**
      - **நீரஜா**
      - **ஷைந்தவி**
    - **திவாகரன்**
    - **காயத்ரி**
- **தையலாம்பிகா**
- **பாலக**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவளி

காசிப கோத்திரத்தின்
வழிவந்த
**மார்க்கண்டேய ஐயர்**
+
**லட்சுமியம்மா**

↓

**சௌந்தரவல்லி**

**லசுப்ரமண்யசர்மா**

குரு)

**ஜெயலட்சுமி**
+
**ஸ்ரீதரன்**

- **ந்ரி**
- **கோதாலட்சுமி**
- **சாருஸ்மிதா**

**ஜெயானந்த சர்மா**
(J.R.Pharmacy)
+
**ரமாதேவி**

- **பிரசன்னா**
- **பிரவீன்**

**யோகானந்த சர்மா**
(ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய பிரதமகுரு) (ஆசிரியர்)
+
**கௌரி**
(ஆசிரியை)

- **பாலமயூரன்**
- **ஆரண்யா**

**யோகராணி**
(Dip in Edu)
உ.க.ப.வர்த்தகம்

**ஜெகதாம்பிகை**
(Dip in Edu)
ஆசிரியை

**பாலரஞ்சனி**
(ஆசிரியை)
+
**சோ.ஜெயபால்**
(வைஷ்ணவி வீடியோ)

↓

**சுப்ரஜன்**

**கலாரஞ்சனி**
(B. Ed.Tamil)(ஆசிரியை)
+
**பா.வரதராஜ சர்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது!
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது!
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்!
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்,
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது!
எதை நீ கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது!
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது!
மற்றொருநாள், அது வேறொருவருடையதாகும்!



'இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்'

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

ரகுராம்ஸ் பதிப்பகம்
இல: 416, பிரதான வீதி, மாத்தளை.தொ.பே:066-2230666

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org